**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No.459/2024**

**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர். ராஜலட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆசைத்தம்பி | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 17th, 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி அரசு மருத்துவமனையில் மூத்த உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 02.04.2023ம் தேதி, மாலை 05.00 மணிக்கு நான் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திருமதி.மகேஸ்வரி என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது, அவரை அடையாளம் தெரிந்த ஒரு நபர் 02.04.2023ம் தேதி, மாலை 03.30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து அருவாளால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

(1). வலது கையில் 8 x 4 x 4 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

(2). வலது மற்றும் இடது தலைப்பகுதியில் 4 x 2 x 2 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(3) கழுத்தின் பின்பகுதியில் 4 x 2 x 2 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு தலைப்பகுதியில் சீ.டீ.ஸ்கேன் எடுக்கப்பட்டது. கழுத்துப்பகுதி, வலது தோள்பட்டை, நெஞ்சுப்பகுதிகளுக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. அதில் எந்தவிதமான எலும்புமுறிவும் காணப்படவில்லை. அவர் 10.04.2023ம் தேதி சிகிச்சை முடித்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். அந்த சிகிச்சை விபரத்தின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகும். காயம்பட்டவருக்கு அரிவாளால் தாக்கும் போது, அவருக்கு மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

(எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.20 16:28:56 +0530